பெறுநர்.                                                                                    16-06-2016

செயலாளர்,

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ,

144, அண்ணாசாலை,

சென்னை – 2.

ஐயா

பொருள்   வேலை பளு ஒப்பந்தத்திற்கு உட்படாத செலவினப்பகுதி, நிர்வாகப்பகுதி மின் உற்பத்தி வட்டங்கள் ஆகியவற்றில் பணிப்பகிர்வு மற்றும் ஊழியர் எண்ணிக்கையை வரையறை செய்தல்.

பார்வை   1. I.D.No.23 of 2013

2. Petitioner Union Advocate letter dated 15-6-2016.

தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் வருவாய்ப்பிரிவு,களப்பிரிவு,பண்டகசாலைப் பிரிவு, அட்டைப்பபடியல் பிரிவு ஆகிய பகுதிகளின் வேலை பளு ஒப்பந்தம் பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது. அவ்வப்போது திருத்தி அமைக்கப்படுகின்ற ஒப்பந்தப்படி, ஊழியர்களின் பணிபகிர்வு செய்யப்பட்டு அதற்கேற்ப பணியாளர்களின் எண்ணிக்கையும் வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால் மேலே குறிப்பிட்ட நான்கு பிரிவுகளைத் தவிர, இதர வேலைப்பளு ஒப்பந்தத்திற்கு உட்படாத நிர்வாகப் பிரிவு மற்றும் செலவினப் பிரிவுகளுக்கு பணிப்பகிர்வையும் , பணியாளர்களின் எண்ணிக்கையையும் தொழிற்சங்கங்களோடு பேசி, ஒரு நியாயமான வரையறையை செய்திட வேண்டும் என்ற நீண்ட நாளைய கோரிக்கையை ஏற்று,1980-ம் ஆண்டில் மின்வாரியம், மத்திய அலுவலகத்தில் உள்ள செலவினப் பகுதி மற்றும் நிர்வாகப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு பிரிவின் பணித்தன்மைகளையும் ஆய்வு செய்து, பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் அளவு முறை ஆகியவைகளைப் பற்றி பரிந்துரை செய்திட உயர் அதிகாரிகளைக் கொண்ட ஒரு தனிக் குழுவினை அமைத்தது.

இக்குழு தீவிர ஆய்வு செய்து கொடுத்த பரிந்துரையின் பேரில் , வாரிய உத்திரவு எண் 120 (Adm) dated.04-03-1981-ல் அன்றிருந்த 15 மின் விநியோக வட்டங்கள் மற்றும் 7 உற்பத்தி மற்றும் கட்டுமான வட்டங்களின் மத்திய அலுவலகங்களுக்கு 1.Administration 2. Correspondence 3.Entitlement 4.A.P.S. 5.Accounts 6. Stores 7.Cash 8.Revenue என எட்டு பொதுப்பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவின் பணிகளையும் செய்திட தேவைப்படும் கணக்கு மேலாளர், உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகிய பொறுப்புக்களை வரையறுத்து உத்திரவு வெளியிடப்பட்டது.

…2…

மத்திய அலுவலகத்தில் பணியாளர் அளவுகளை மறு ஆய்வு செய்து, ஒவ்வொரு விநியோக வட்ட மத்திய அலுவலகத்திற்கும் , மேற்பார்வை பொறியாளர் முதல் அலுவலக உதவியாளர் வரை அனுமதிக்கப்படவேண்டிய பொறுப்புக்கள் / பணியாளர்கள் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டு வாரிய உத்திரவு எண் 30-நாள் 29-01-1986-ல் வெளியிடப் பட்டது. வட்டங்களில் பெரியது, சிறியது என்ற நிலையில் மேற்கண்டவாறு அனுமதிக்கப் படவேண்டிய பொறுப்புக்களில் , சிறிய மாற்றங்கள் செய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப் பட்டது.

மேற்கண்ட இரு உத்திரவுகளின் அடிப்படையிலும் , அனுமதிக்கப்பட்ட பணியாளருடைய எண்ணிக்கை குறைவாக உள்ளது என்று தொழிற் சங்கங்கள் முறையிட்டதின் பேரில் , 19-01-1994-ல் ஏற்பட்ட ஊதிய உயர்வு மற்றும் வேலை பளு 12(3)ஒப்பந்தத்தின் போது கீழ்கண்ட நிபந்தனை சேர்க்கப் பட்டது.

3 (viii) Many demands raised by the Unions for creating promotion avenues and formulating staff pattern in non-workload areas will be examined separately."

எங்களது சங்கத்தின் சார்பில் அனைத்து மின்விநியோக வட்டங்களுக்கும் ஒரே சீரான (Uniform)பணியாளர் அளவினையும் பணிப்பகிர்வினையும் செய்திட வேண்டும் என்று 2-7-94 கடிதத்தில் வேண்டியிருந்தோம்.

தொழிற்சங்கங்களின் கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்து நிர்வாகம் மற்றும் செலவினப்பிரிவு உற்பத்தி மற்றும் கட்டுமானப்பிரிவுகளுக்கு பணிப் பகிர்வு பணியாளர் எண்ணிக்கைவரையறுத்து அறிக்கை சமர்ப்பித்திட வாரிய உத்திவு எண் 331 நாள் 29-11-1994 வெளியிடப்பட்டது.

ஆனால் துரதிஷ்டவசமாக மேற்கண்ட குழுவின் அறிக்கை வெளிபடுத்தவும் இல்லை. செயல் படுத்தவும் இல்லை.

எனவே இப்பிரச்சனையில் எங்கள் சங்கத்தின் சார்பில் 07-05-2008-ல் ஒரு தொழில் தகராறு எழுப்பினோம். நிர்வாகத்தின் சார்பில்

" இவற்றில் ஏதேனும் குறைகள் இருந்தால் அதனைப் பேசி தீர்ப்பதற்கு வாரியம் தயாராக உள்ளது"

என்று பதிலளித்தது. ஆனால் நிர்வாகம் பேசிடவில்லை குறைகள் தீர்க்கப்படவில்லை.

எனவே மீண்டும் ஒரு ஊதிய உயர்வு மற்றும் வேலை பளுவிற்கான 12(3) ஒப்பந்தம் 18-11-2009-ல் கையெழுத்தான போர்து இந்த ஒப்பந்தத்திலும் வரிசை எண் 3-ல்

"Many demands raised by the Unions for creating promotion avenues and formulating staff pattern in non-workload areas will be examined separately."
என்ற நிபந்தனை சேர்க்கப்பட்டது.

மேற்கண்ட ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்ட நிபந்தனையின் படி வேலை பளுவிற்கு உட்படாத அனல் மின்உற்பத்தி நிலையம், பொது நிர்மான வட்டம் மற்றும் நீர்மின் உற்பத்தி நிலையம் ஆகியவைகளுக்கு தொழிற்சங்கங்களோடு பேச்சு வார்த்தை நடத்தி ஒப்பந்தம் போடப்பட்டு முறையே 03-04-2012, 24-01-2014 மற்றும் 19-07-2014 ஆகிய தேதிகளில் வாரிய உத்திரவுகளும் வெளியிடப்பட்டது.

ஆனால் மின்வாரியத்தின் விநியோகம் உற்பத்தி மற்றும் கட்டுமான வட்டங்களின் மத்திய அலுவலகங்களில் நிர்வாகப்பிரிவு மற்றும் செலவினப் பிரிவு பகுதிகளுக்கான பணிப் பகிர்வு மற்றும் பணயாளர் எண்ணிக்கை மட்டும் இன்னமும் சீர்படுத்தப்படாமல் உள்ளது.

…3…

மேற்கண்ட மத்திய அலுவலகங்களில் பணியாளர் எண்ணிக்கை குறைவாக இருப்பதாலும் , செய்யவேண்டிய பணிகள் கூடுதலாக இருப்பதாலும் , வாரியத்தின் பணிகள் செவ்வனே நடைபெறமுடியவில்லை. ஊழியர்களுக்கு சேரவேண்டிய பலன்கள் காலதாமதம் ஆகின்றன. புணிகள் தேங்கி விடாமல் தடுப்பதற்கு, வேலை பளுவுக்கு உட்பட்ட வருவாய் பிரிவுகளிலிருந்தும் , களப்பிரிவிலிருந்தும் பணியாளர்கள் டைவர்ஸன் செய்யப் படுகிறார்கள். இதனால் மின்வாரியத்திற்கு ஒருபுறம் வருவாய் இழப்பு ஏற்படுவதுடன் , மற்றொருபுறம் மின் பராமரிப்பு பணிகளிலும் குந்தகம் ஏற்படுகிறது.

இந்நிலையில் இப்பிரச்சனையில் நாங்கள் எழுப்பியிருந்த தொழில் தகராறு தமிழக அரசால் அரசாணை (டி) எண் 301 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (அ) 10-07-2013-ன் படி தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட்டு, தொழிற்தகராறு எண் 23/13 ஆக பதிவு செய்யப்பட்டு, 15-09-2013 முதல் வழக்கு நடந்து கொண்டு வருகிறது.

மேற்கண்ட வழக்கு 13-06-2016 அன்று விசாரணைக்கு வந்த போது, மாண்புமிகு தொழில் தீர்ப்பாயம் கீழ்கண்ட உத்திரவை பிறப்பித்துள்ளதாக எங்கள் சங்கத்தின் வழக்கறிஞர் 15-06-2016 கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

*" WW-1 Chief examined. Exhibits Ex.W-1 to Ex.W-14 marked. No representation for respondent. In the Proof Affidavit, it has been stated that they are ready for negotiation to settle the dispute. The Respondent has stated in their Counter that since this Industrial Dispute is pending before this Tribunal, they could not have negotiation with the Union. On considering the evidence of WW-1 and written statement of the respondent, this Tribunal is of the view that direct negotiation with regard to dispute pending adjudication is necessary and hereby direct the Management to convene the direct talks with the Petitioner Union and other Unions to resolve the dispute."*

எனவே மரியாதைக்குரிய வாரியச்செயலாளர் அவுர்கள் இப்பிரச்சனையில் அனைத்து தொழிற் சங்கங்களையும் அழைத்து நிர்வாகத்துடன் நேரடி பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து தொழில் தகராறினை சுமுக முடிவிற்கு கொண்டு வருமாறு வேண்டுகிறோம்.

பேச்சு வார்த்தையின் போது எங்கள் சங்கத்தின் முழு ஒத்துழைப்பையும் தருவதற்கு தயாராக உள்ளோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்.

இணைப்பு : வழக்கறிஞரின் 15-06-2016 தேதியிட்டக் கடிதம்.

☎ : 044-26264765
Cell : 94441 21261
98408 06622
94451 41585

# R. ARUMUGAM, B.A., B.L.,

ADVOCATE

RESIDENCE : New No.9, Old No.36, M-Block,
10th Street, Anna Nagar East,
Chennai - 600 102.

CHAMBER : 30, Law Chambers,
High Court Buildings,
Chennai - 600 104.

E-mail : aru1948@yahoo.co.in

Date ................................
15.06.2016

To

The General Secretary,
TNEB Accounts & Executive Staff Union,
Chennai,

Sir,

Ref: I.D.No.23 of 2013 – Industrial Tribunal, Chennai.

-------

The above dispute is raised by you against the TNEB to determine the Staff pattern in respect of Central Officers in Distribution and General Circles of TNEB which are not covered under the Workload Agreement.

The above dispute was taken up for hearing on 13.06.2016. After hearing the case, the Hon'ble Industrial Tribunal passed the following order on1 3.06.2016 which is extracted hereunder.

> "WW-1 Chief examined. Exhibits Ex. W-1 to Ex. W-14 marked. No representation for respondent. In the Proof Affidavit, it has been stated that they are ready for negotiation to settle the dispute. The Respondent has stated in their Counter that since this Industrial Dispute is pending before this Tribunal, they could not have negotiation with the Union. On considering the evidence of WW-1 and

written statement of the respondent, this Tribunal is of the view that direct negotiation with regard to dispute pending adjudication is necessary and hereby direct the Management to convene the direct talks with the Petitioner Union and other Unions to resolve the dispute".

In view of the specific direction, you can send a letter informing about your readiness about the direct talks to the Management.

Yours faithfully,

(R.ARUMUGAM)